**Kalanjiyam International Journal of Tamil Studies**
**களஞ்சியம் - சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்**
Peer-Reviewed | Open Access | Crossref DOI & Global Indexing | Google Scholar Impact Factor
DOI: https://doi.org/10.63300/kijts15sp012026.06
https://ngmtamil.in/

# பண்டையத் தமிழரின் வாழ்வியல் கூறுகள்

**முனைவர் ஆ.விண்ணரசி,** உதவிப்பேராசிரியர்,
நிர்மலா மகளிர் கல்லூரி (தன்னாட்சி), கோவை 18.
தமிழ்நாடு, இந்தியா,
Email_ srvinnarasi4@gmail.com, Conduct Number – 75029 96590

**முன்னுரை**

பண்பாடு என்பது பண், பாடு ஆகிய இருசொற்களின் சேர்க்கையாகும். உலக நடைமுறையையும் சமுதாய நடைமுறையையும் அறிந்து அதற்கேற்ப வாழ்வதே பண்பெனப்படு என கலித்தொகை கூறுகிறது. பண்பாடு என்பது திருந்திய ஒழுக்கம் என்றும் நாகரிகம் என்பது திருந்திய வாழ்க்கை எனவும் அழைக்கப்படுகிறது. தமிழர்களின் பண்பாட்டுக் கூறுகளான காதல், வீரம், நட்பு, விருந்தோம்பல், ஈகை, கொடை, கற்புடமை, உலக ஒருமைப்பாடு ஆகியவற்றை விளக்கும் இலக்கியங்கள் காலத்தின் கண்ணாடியாக அமைகின்றன. இதனையே முன்னது அகக்கூறு என்றும் பின்னது புறக்கூறு எனவும் பொருள்படுகிறது. தமிழர் வாழ்வை அகவாழ்வு, புறவாழ்வு என இரண்டாக இலக்கணம் வகுத்து வாழ்ந்தமை பண்பாட்டின் சிகரமாகக் கருதப்படுகிறது. கல்தோன்றிய காலமக்களின் நாகரிகம், பண்பாடு, பழக்கவழக்கங்கள், வாழ்க்கை முறை, அரசு, அமைச்சு, ஆட்சிமுறை, போர், வீரம், காதல் போன்றவற்றை நமக்கு எடுத்துரைக்கின்றன. பொதுவாகவே மக்களுடைய செயற்பாட்டுக் கோலங்களையும், அத்தகைய செயற்பாடுகளுக்கு முக்கியத்துவத்தையும், சிறப்பு தன்மையும் வழங்கக்கூடிய குறியீட்டு அமைப்பையே பண்பாடு என வரையறை செய்யப்படுகிறது. இது ஒரு சமூகத்தின் விழுமியங்கள், நம்பிக்கைகள், கலைகள், பழக்கவழக்கங்கள் மற்றும் அறிவு ஆகியவற்றை உள்ளடக்கிய ஒரு முழுமையான வாழ்க்கை முறையாகும். பண்பாடு தலைமுறை தலைமுறையாக கடத்தப்பட்டுச் சமூகத்தின் அடையாளமாக விளங்குகிறது. இவ்வாறான தொன்மையான வரலாறு கொண்ட தமிழர்கள் பண்பாடு கூறுகள் பற்றி ஆய்வு செய்வது இக்கட்டுரையின் நோக்கமாக அமைகிறது.

**தமிழர்களின் பண்பாடு**

உலகில் தோன்றிய எத்தனையோ பண்பாடுகள் காலத்தால் அழிந்து போய் உள்ளனவாக காணப்படுகின்றன. வரலாற்றை திரும்பிப் பார்த்தால், பல பண்டைய நாகரிகங்கள் மற்றும் அவற்றின் தனித்துவமான பண்பாடுகள் காலப்போக்கில் மறைந்துவிட்டதை உணரமுடியும். ஆனால் தமிழர் பண்பாடானது தொன்மையான ஒன்றாகவும், தற்காலம் வரை பின்பற்றப்பட்டு வரக்கூடிய

*தமிழ்த்துறை - சங்கரா அறிவியல் மற்றும் வணிகவியல் கல்லூரி (தன்னாட்சி)

ஒன்றாகவும் காணப்படுகின்றது. பண்டைய தமிழர்கள் வீரத்தைப் பற்றித் தொல்காப்பியப் புறத்திணை இயல் எடுத்துக் கூறுகின்றது. பெரும்பாலும் தற்காப்பு முறையில் தான் போர் நடைபெற்றது. தேர்ப்படை, யானைப்படை, குதிரைப்படை, காலாட்படை என்ற நால்வகைப் படைகளும் போரில் ஈடுபட்டன. வெட்சி, வஞ்சி, உழிகை, தும்பை என்ற நான்கு புறத்திணை பகுதிகளிலும் தமிழர்களின் போர்முறைகள் தொல்காப்பியத்தில் காணப்படுகின்றன. மேலும,; வீரர் அல்லாதவர்கள், புறங்காட்ட ஓடுவார், புண்பட்டார், முதியோர், இளையோர், இவர்கள் மீது படைக்கலம் செலுத்தலாகாது என்பதும் புறநானூற்றால் அறிய முடிகிறது. அறத்தின் வழி மாறுதலே தமிழர்களின் பண்பாடு என்பதனை,

**“அழுக்காறு அவாவெகுளி இன்னாச்சொல் நான்கும்**

**இழுக்கா இயன்றது அறம்”(குறள்:எ:35)**

என்ற குறளின் மூலமாக அறியலாகிறது. அதாவது, பொறாமை, பேராசை, கோபம், கடுஞ்சொல் ஆகிய நான்கும் இல்லாமல் வாழ்வதே அறம் என்றும், அதுவே தமிழர்களின் பண்பாடு என்றும் திருவள்ளுவர் கூறும் தமிழர்களின் பண்பாட்டுக் கூறுகளாய் அமைகின்றன. தமிழர் பண்பாட்டின் அமைப்பொழுங்கானது இரண்டு அம்சங்களைக் கொண்டதாக அமைகிறது. ஒன்று, அதனளவில் சார்புடையது. மற்றறொன்று, உலகளாவிய அமைப்பியல்புகளோடு பொருந்தக்கூடியது அதாவது, தமிழ்ப் பண்பாட்டின் உருவகத்தைத் தரக்கூடிய ‘புறக்கூறுகள்’ பண்பாடு சார்ந்தும், அவற்றின் ‘அகக் கூறுகள்’ உலகளாவிய அமைப்புகளோடு ஒத்திசைவு பெறுவதும் இதன் உட்பொருளாக திகழ்கின்றன.

**பண்பாட்டின் வகைகள்**

பண்பாட்டை மூன்று வகையாகச் சமூக இயல் அறிஞர்கள் பிரிப்பார்கள். மனிதன் தன் அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்யும் முறைகளினால் வெளிப்படும் பண்பாடு முதல் வகையைச் சார்ந்தது. கல்வி, கேள்வி வழியாகப் பேணப்படும் பண்பாடு இரண்டாம் வகையைச்சார்ந்ததாக இடம் பெறுகிறது. குறியீடுகளைப் பயன்படுத்துவதின் வாயிலாக வெளிப்படும் பண்பாடு இறுதி நிலையை அடைகிறது. காடுகளில் இயற்கையொடும் விலங்கினங்களோடு வாழ்ந்த மனிதன், விலங்கினங்கள் கொடுக்கும் தொல்லைகள் மற்றும் இயற்கையான மழை, வெயில் ஆகியவற்றிலிருந்து வரும் துன்பங்களிலிருந்தும் விடுபட்டுப் பாதுகாப்பாக வாழ்வதற்குப் பல உறைவிடங்களைக் கண்டுகொண்டு தேர்ந்தெடுத்தான். மலைக்குகைகளில், மரத்தின்மேல் பரண் அமைத்து வாழ்ந்தான். நாளடைவில் குடிசைகள் அமைத்துக் கட்டடங்கள் கட்டித் தான் வாழும் இருப்பிடத்தை அல்லது உறைவிடத்தைச் சிறப்பாக அமைத்து வாழ்ந்தான். இத்தகைய உறைவிடங்களும் அவரவர் பண்பாட்டையும் மரி்யும் வெளிப்படுத்தும் வாயிலாக காணப்பட்டதை அறியமுடிகிறது.

**இயற்கை நேயம்**

இயற்கை நேயம் என்பது முக்கியமான தமிழர் பண்பாடு ஆகும். மனிதர் அல்லாத அனைத்து உயிர்களையும் உயிரற்ற பொருள்களையும் அஃறிணை என்று தமிழ் இலக்கணம்

வகைப்படுத்துகிறது. ஆனால் அஃறிணையையும் உயர்திணை போலக் கருதும் பண்பாட்டைத் தமிழர் பின்பற்றி வந்துள்ளனர். என்பதை,

**"நும்மினும் சிறந்தது நுவ்வை ஆகுமென்று" (நற்:பா.எண்:172)**

தன் தாய் விதை போட்டு வளர்த்த புன்னை மரத்தைத் தமக்கையாக ஏற்றுக்கொண்ட ஒரு பெண்ணை நற்றிணை சுட்டிக்காட்டுகிறது. மரம், செடி, கொடிகளையும் பறவைகளையும் தூது அனுப்பும் இலக்கிய உத்திகளையும் இலக்கியங்களில் காணலாம். இங்ஙனம் எல்லா உயிர்களிடத்தும் அன்பு காட்டுதல் என்பது தமிழரின் வாழ்வியல் கோட்பாடாக அமைந்துள்ளதை அறியமுடிகிறது. இயற்கையை மனித உணர்வுகளுக்கு ஏற்ற பின்னணியாகக் கொள்வது புலவர்களின் வழக்கம். இயற்கைப் பொருட்களைப் பேசுவனவாகவும் கேட்பனவாகவும் கருதி அவற்றிடம் தம் உணர்வுகளை வெளிப்படுத்தும் வகையில் பல பாடல்களைப் புலவர்கள் எழுதியுள்ளனர். இயற்கைப் பொருட்களின் பெயர்களைக் குழந்தைகளுக்குச் சூட்டுவது தமிழர் வழக்கம். கதிரவன், நிலா ஆகியவற்றைக் குறிக்கும் பல சொற்கள் இன்றும் மக்கட்பெயர்களாக வழங்குகின்றன. இவையெல்லாம் தமிழர் பண்பாட்டில் இயற்கை நேயம் முக்கிய இடம் பெறுவதன் சான்றுகளாக அமைகின்றன.

**உணவுப் பண்பாடு**

உணவுப் பண்பாடு என்பதில் தமிழருக்கே உரிய தனித்தன்மைகள் பல உள்ளன. முதலாவது கூறு கூடி உண்ணுதல். மகிழ்ச்சி என்றால் அதைக் கொண்டாடக் கூடி உண்பது தமிழர் வழக்கமாக இலக்கணம் முதல் இலக்கியம் வரை காணலாகிறது. போரில் வெற்றி, திருமணம், பிறந்த நாள், திருவிழா உள்ளிட்ட மங்கல நிகழ்வுகள் சிறப்பு விருந்துடன் இன்றும் காணப்படுகின்றன. இறப்பு போன்ற துயரம் சூழும் தருணங்களிலும் கூடி உண்ணும் வழக்கத்தைக் இன்றும் நடைமுறையில் உள்ளது. அனைவரும் கூடி மகிழ்ந்துண்ணும் நிகழ்வை **'உண்டாட்டு'** என்று பழந்தமிழ் இலக்கியங்கள் கூறுகின்றன. அதனையே,

**"தொட்டிமிழும்கழல் மறவர்**
**மட்டு உண்டு மகிழ்தூங்கின்று" (பு.வெ.மா:15)**

புறப்பொருள் வெண்பாமாலை என்னும் இலக்கண நூலில் ஆனிரைகளைக் கவர்ந்து வந்த வெட்சி மறவர்கள் மகிழ்ச்சியில் கள்ளுண்டு மகிழ்ந்ததை எடுத்துரைப்பதிலிருந்து உணரமுடிகிறது.

**விருந்தோம்பல்**

விருந்தோம்பல் தமிழர் பண்பாட்டின் இன்னொரு முக்கியமான கூறு விருந்தோம்பல் **'விருந்து'** என்னும் சொல்லுக்குப் **'புதுமை'** எனப் பொருள் உண்டு. வழக்கமாக நாம் உண்ணும் உணவு அல்லாமல் புதிய வகை உணவுகளை உண்ணும் நிகழ்வை விருந்து என்று அழைக்கிறோம். உறவினர்களும் நண்பர்களும் நம்முடன் இருப்பவர்கள். அடிக்கடி சந்திப்பவர்கள். அவர்களை நாம் உபசரிப்பது இயல்பு. இதற்கு முன்னர் அறிமுகம் இல்லாமல் இப்போதுதான் புதிதாக அறிமுகம் ஆகும் ஒருவரே **'விருந்தினர்'** ஆவார். அத்தகைய விருந்தினரை மனம் கோணாதவாறு கவனித்துக் கொள்ளுதலை **'விருந்தோம்பல்'** என்கிறோம். செல்லும் விருந்தினரை பிரியாவிடை கொடுத்து அனுப்பிவிட்டு வரும் விருந்தினரை வரவேற்க வழி பார்த்து இருப்பது தமிழர் இயல்பு. விருந்தோம்பலைப் பற்றிப் பேசாத தமிழ் இலக்கியமே கிடையாது. இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனைக் குமட்டூர் கண்ணனார் பாடியுள்ள இரண்டாம் பத்தில் விருந்து பற்றிய செய்தி சிறப்பாக இடம் பெற்றுள்ளது. தன்னையும் தன்னைச்சேர்ந்தோரையும் பிறது என்று எண்ணாமல் பரிசில் வேட்ட நின்ற யாவறையும் பசியால் வாடாமல் பேரளவு செல்வதனை நல்குவதை

*தமிழ்த்துறை - சங்கரா அறிவியல் மற்றும் வணிகவியல் கல்லூரி (தன்னாட்சி)

**" தண்ணியல் எழிலி தலையாயினும்**

**வயிறு பசி கூர வீயலன் வயிறுமா சீலியரவனீன்ற தாயே!**

**(பதி:பத்து 2 : 26 - 27)**

என்னும் வரிகளில் தமிழர்கள் அமிர்தமே கிடைத்தாலும் தாமே உண்ணாது பிறருக்கும் கொடுக்கும்நல்லோர் ஆவர். இவர்களால்தான் உலகம் நிலைத்திருக்கிறது என்று அவ்வரிகள் உணர்த்துகின்றன. சிலப்பதிகாரத்தில் கண்ணகியைப் பிரிந்து கோவலன் சென்ற காலத்தில் விருந்தினரை உபசரிக்க இயலவில்லையே என்றுதான் கண்ணகி வருந்துகிறாள். அசோகவனத்தில் சிறையிருக்கும் சீதை 'விருந்தினர் வந்தால் அவர்களை உபசரிக்கத் தானில்லாமல் இராமன் என்ன பாடு படுவானோ' என்று யோசிக்கிறாள். விருந்தோம்பலின் சிறப்பை உணர்ந்த திருக்குறள் உள்ளிட்ட நீதி நூல்களில் விருந்தோம்பல் சிறப்பிடம் பெற்றுள்ளளதை அறியமுடிகிறது.

**தமிழரின் அறப்போர் முறை**

தமிழரின் அறப்போர் முறை முறையாக அமைந்திருந்தது. இதனை நெட்டிமையார் புறப்பாடலால் அறியலாம். பசுக்களும், பசுவை ஒத்த பார்ப்பனர்களும், பெண்களும், நோயுடையவர்களும், புதல்வர்களைப் பெறாதவரும், யாம் அம்பு விடுவதற்குமுன் பாதுகாப்பான இடத்திற்குச் செல்லுங்கள், என வீரன் ஒருவன் கூறுவதிலிருந்து தமிழரின் அறப்போர் முறை விளங்கும்.

**"ஆவும் ஆனியற் பார்ப்பன மாக்களும்**

**பெண்டிரும் பிணியுடை யீரும் பேணித்**

**தென்புல வாழ்நர்க்கு அருங் கடன் இறுக்கும்**

**பொன் போற் புதல்வர்ப் பெறாஅ தீரும்**

**எம் அம்பு கடிவிடுமுன் நும் அரண்சேர்மின்"**

**(புறம். பா.எண்:9)**

என்னும் பாடல் வழியாக பழந்தமிழரின் போர் அறநெறி தெளிவாகிறது. மேலும், வீரர் அல்லாதவர்கள், புறங்காட்ட ஓடுவார், புண்பட்டார், முதியோர், இளையோர், இவர்கள் மீது படைக்கலம் செலுத்தலாகாது என்பதும் புறநானூற்றால் அறிய முடிகிறது.

**பழந்தமிழரின் நட்பு**

சங்ககாலத் தமிழர் நட்பினை பெரிதும் மதித்து வாழ்ந்தனர். திருவள்ளுவரும் உண்மையான நட்புக்கு இலக்கணம் கூறியுள்ளார். கபிலரும் பறம்பு மலைத்தலைவன் பாரியும் நட்பாயிருந்தனர். பாரியின் மகளிர் இருவரையும் பாரி இறந்தபின் கபிலரே மணமுடித்து வைக்கிறார். மேலும் கபிலர் சேரன் செல்வக் கடுங்கோ வாழியாதனைக் கண்டு பறம்பு நாட்டின் வளம், பாரியின் சிறப்பு, அவன் வீரம், அவனைப் பிரிந்து வாடும் மக்கள் நிலையைக் கூறுகிறார். தன் வறுமையைக் கூறாது, நண்பனின் பிரிவை சேரமன்னனிடம் கூறும் நிலை அவர்கள் நட்பின் ஆழத்தைக் எடுத்துரைக்கிறது. என்ற வள்ளுவரின் வாக்குப்படி தீமையை நீக்கி, நல்வழியில் செலுத்தி, துன்பம் வரும்போது உடனிருந்து அனுபவிப்பதே நட்பாகும் என்பதற்குத் தாமே சான்றாகிறார் பிசிராந்தையார். நட்பின்தன்மையை உணர்ந்த மன்னன்,

**" பெருமலை விடகரத்து அருமிசைக் கொண்ட**

**சிறியிலை நெல்லித் தீம்கனி குறியாது**

**ஆதல் நின் அகத்து அடக்கிச்**
**சாதல் நீங்க எமக்குஈத் தாயே!"**
**(புறம். பா.எண்:91)**

என்னும் பாடல் வரிகள் மூலம் அரசன் - புலவர் என்னும் நிலையைத் தாண்டி, அன்பும் மரியாதையும் கலந்த உன்னதமான நட்பாக விளங்கியதை சங்க காலத் தமிழர் நட்பினை பெரிதும் மதித்துப் போற்றியதை அறியமுடிகிறது.

**பழந்தமிழரின் ஒருமைப்பாடு**

மொழிக்கு இலக்கணம் வகுத்த தமிழர்கள் தங்களது வாழ்வுக்கும் இலக்கணம் வகுத்தே வாழ்ந்து வந்துள்ளனர். இந்த வகையில் உலகில் முதன்மையானதாகவும், சிறந்ததாகவும் தமிழர்களின் பண்பாடு காணப்படுகின்றது. பண்டைத் தமிழர்கள் நாகரிகம் பண்பாட்டில் சிறந்து இருந்தனர். தமிழ்நாட்டில் உழவு, நெசவு, வாணிகம் போன்ற தொழில்களும் அவற்றின் சார்பு தொழில்களும் சிறந்திருந்தன. கடல்கடந்து வெளிநாடுகளுக்கும் சென்று தமிழர் வணிகம் செய்து சிறந்தனர். நமது பண்பாடு, நாகரிகம், மொழி யாவும் வெளிநாடுகளில் சிறக்கக் காரணம் பண்டைத் தமிழர்களே ஆவர். கணியன் பூங்குன்றனார் என்னும் புலவரின் புறப்பாடல் ஒன்றே நம் தமிழரின் உலக ஒற்றுமைக் கொள்கையை உலகுக்குப் பறைசாற்றும் வகையில் **'யாதும் ஊரே யாவரும் கேளிர்'** என்னும் வரிகள் அமைந்துள்ளது. உலக மக்கள் யாவரையும் உறவாக எண்ணும் பண்டைத் தமிழரின் உள்ளம் உயர்ந்ததேயாகும் என்னும் கருத்துப் பலனாகிறது. இது உலகளாவிய சகோதரத்துவத்தையும், மனிதநேயத்தையும் வலியுறுத்தும் ஒரு உயர்ந்த பண்பாட்டு விழுமியமாக அமைகிறது.

**முடிவுரை**

உலகத்தில் மிகப் பழமையான மொழிகளுள் ஒன்று தமிழ். அதற்கேற்பப் பழமையான பண்பாட்டைக் கொண்ட இனம் தமிழர். சில பண்பாட்டுக் கூறுகள் இரண்டாயிரம் ஆண்டுகளாகத் தொடர்ந்து வருவதை இலக்கியப் பதிவுகள் காட்டுகின்றன. பண்பாடு என்பது தொடர்ந்து கற்பது. அதனை அனைவருடனும் பகிர்ந்து கொள்வது. ஒரு தலைமுறையில் கற்றவற்றைப் பின்வரும் தலைமுறையினர் பெற்றுக் கொண்டு அவர்கள்தம் தலைமுறையில் மேலும் புதியனவற்றைக் கற்கின்றனர். இதனால் பண்பாடு தொடர்ச்சியான மாற்றத்திற்கு உட்படுகிறது. சமூக இயல் அறிஞர்களின் கருத்தின்படி, பண்பாடு என்பது, வாழ்க்கை முறை என்பதாகும். ஒவ்வொரு மனித சமுதாயத்திற்கும் ஒரு பண்பாடு உண்டு. ஒரு சமுதாயத்தில் வாழுகின்ற பெரும்பான்மை மக்களின் ஒருமித்த நடத்தைகளையும் எண்ணங்களையும் அது வெளிப்படுத்தும். ஒரு சமுதாயத்தில் அமைந்துள்ள கலை, நம்பிக்கை, பழக்கவழக்கங்கள், மொழி, இலக்கியம், விழுமியங்கள் முதலியன அந்தச் சமுதாயத்தின் பண்பாட்டுக் கூறுகள் எனப்படும். உறவினர்களை உபசரித்தல் மற்றும் வரவேற்றல், இன்சொல் பேசுதல், உயிர்களிடத்தில் அன்பு காட்டுதல், நன்றி மறவாமை, பெண்கள் முதியோர்களை மதித்தல் மற்றும் சிறுவர்களிடத்தில் அன்பு காட்டுதல் போன்றன தமிழர்களின் பண்பாட்டு அம்சங்களாக விளங்குகின்றன. விருந்தோம்பல் தமிழர்களின் முக்கியமான பண்பாடுகளில் ஒன்றாகும். இவ்வாறு தமிழர்களின் உணவுமுறையில் பண்பாட்டுக் கூறுகள் வாழ்வோடு இயைந்த நிலையிலே காட்சித்தருகின்றன. அவர்களின் வாழ்வில் உணவிற்கு அளிக்கப்படும் முக்கியத்துவம் அதனைப் பகிர்ந்துண்ணும் பண்புநிலை, வருவோர்க்கு இல்லையென்று வழங்கும் மாண்பு போன்றவற்றைக் குறிப்பிட்டுச் சொல்லலாம். தமிழர்களின்

முக்கியமான அடையாளங்களில் ஒன்றாக அவர்களுடைய பண்பாடு விளங்குகின்றது என்பது குறிப்பிடத்தக்கதாகும். இந்த அறநெறி, தனிமனித வாழ்க்கையையும் சமூக வாழ்க்கையையும் மேம்படுத்த வழி வகுக்கிறது.

**துணைநூல்கள்**

[1]. ஐயனாரிதனார் - புறப்பொருள் வெண்பா மாலை
[2]. சாரதாபதிப்பகம், சென்னை
[3]. 2.தேவநேயப் பாவாணர், ஞா. திருக்குறள்
[4]. தமிழ் மரபுரை ஸ்ரீ இந்து ஆழுளிகேஷன்ஸ், சென்னை.
[5]. பிரபாகரன் இர. - புறநானூறு மூலமும் எளிய உரையும் (பகுதி - 1), காவ்யா பதிப்பகம் சென்னை.
[6]. பாலசுப்பிரமணியன். கு.வெ(உ.ஆ) - புறநானூறு (தொகுதி1) நியூ செஞ்சுரி புக்ஹவுஸ் (பி)லிட், அம்பத்தூர், சென்னை.
[7]. முனைவர் வி. நாகராசன் கத்துப்பாட்டு மூலமும உரையும், பதிப்பாசிரியர் - ஆனைவர் ஆ.ம.பரிமணம் நியூசெஞ்சுரி புக் ஹவுஸ் சென்னை

*தமிழ்த்துறை - சங்கரா அறிவியல் மற்றும் வணிகவியல் கல்லூரி (தன்னாட்சி)